இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம்:10.8.1942–முரசு:84–ஒலி:108–திருவள்ளுவர் ஆண்டு 2056–கார்த்திகை 12–வெள்ளிக்கிழமை 28 நவம்பர் 2025–திருச்சி ★★ 12+12+20 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:84 - Issue 108: Thiruvalluvar Year - 2056 - Karthigai 12 - Friday 28 November 2025 - Trichy ★★ 12+12+20 Pages ₹ 5.00


## தமிழர்களை தேசவிரோதிகள் என்று சொல்லும்

# ஆளுநர் ஆர்.என்.ரவியின் ஆணவத்தை அடக்குவோம்!

## ஈரோடு அரசு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் எச்சரிக்கை!

**ஈரோடு, நவ.28-**

**“தமிழர்களை தேச விரோதிகள் என்று சொல்லும் ஆளுநர் ஆர்.என்.ரவியின் ஆணவத்தை அடக்குவோம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஈரோட்டில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் உரையாற்றும்போது கடும் எச்சரிக்கை விடுத்தார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.11.2025) ஈரோட்டில் நடைபெற்ற அரசு விழாவில், 235 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவிலான 790 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 91 கோடியே 09 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 23 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இவ்விழாவில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, சு.முத்துசாமி, மு.பெ.சாமிநாதன், மா.மதிவேந்தன், திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் செல்வராஜ், கே.இ.பிரகாஷ், கே.சுப்பராயன், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி.சந்திரகுமார், ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ்.கந்தசாமி, ஈரோடு மேயர் திருமதி நாகரத்தினம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.11.2025) ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை வருமாறு:-

ஈரோடு மாவட்ட அரசு விழாவில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய நவீனத் தமிழ்நாட்டின் வரலாற்றுக்கு அடித்தளமான தந்தை பெரியாரை தந்த இந்த ஈரோட்டுக்கு, திராவிட இயக்கத்தின் முதன்மைத் தொண்டனான நான் பெருமையோடு இங்கே வந்திருக்கிறேன்.

ஈரோட்டுப் பூகம்பம் தந்தை பெரியார் இல்லையென்றால், திராவிட இயக்கம் இல்லை; பேரறிஞர் அண்ணா இல்லை; முத்தமிழறிஞர் கலைஞர் இல்லை; ஏன், தமிழ்நாட்டிற்கு இந்தளவுக்கு வளர்ச்சியும் இருந்திருக்காது!

ஈரோட்டைப் பற்றி சொல்ல வேண்டும் என்றால், இது, மஞ்சள் நகரம்! சந்தன நகரம்! தொழில் நகரம்! ஜவுளி நகரம்! கைத்தறி நகரம்! இயற்கை நகரம்! விடுதலை வீரர்களைத் தந்த நகரம்! இத்தகைய பெருமைமிகு ஈரோட்டில், இந்த அரசு விழாவை சிறப்பாக மிகுந்த சிறப்போடு ஏற்பாடு செய்திருக்கிறார் நம்முடைய கழகத்திற்கு கிடைத்த ‘நல்ல முத்து’ அமைச்சர் முத்துசாமி அவர்கள்! அமைதியானவர்! அடக்கமானவர்! அதே நேரத்தில், ஒரு வேலையை சிறப்பாக செய்து முடிப்பதில் ஆற்றல்மிக்கவர்! இரண்டே வரிகளில் சொல்ல வேண்டும் என்றால், அனுபவத்தால் மூத்தவர்! உழைப்பினால் இளைஞர்!

இந்த நிகழ்ச்சியை மாபெரும் மாநாட்டைப் போல ஏற்பாடு செய்திருக்கின்ற அவருக்கும், அவருக்குத் துணை நிற்கும் ஈரோடு மாவட்ட ஆட்சியர் எஸ்.கந்தசாமி அவர்களுக்கும், அதுபோல மாவட்டத்தின் அரசு அதிகாரிகளுக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!

இந்த மாபெரும் விழாவில், 91 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 23 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, 235 கோடியே 73 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 790 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 1 இலட்சத்து 84 ஆயிரத்து 491 பேருக்கு, 278 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்குவது என்று, 605 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்களை மக்களுக்கு அர்ப்பணிக்கும் வாய்ப்பு இன்றைக்கு எனக்கு கிடைத்திருக்கிறது!

### ரூ.605.44 கோடியில் மக்களுக்கான திட்டங்கள்!

இந்த விழாவில், கலந்து கொள்ள என்னிடம் தேதி கேட்டபோது, “கடந்த ஆண்டு மார்ச் மற்றும் டிசம்பர் மாதங்களில், பொள்ளாச்சி மற்றும் ஈரோட்டில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் நான் அறிவித்த 12 அறிவிப்புகளின் ஸ்டேட்டஸ் - நிலை என்ன?” என்று நான் கேட்டேன். அதிகாரிகள் என்னிடம் பகிர்ந்து கொண்ட விவரங்கள், அறிவிப்புகள் எல்லாம் பல்வேறு நிலைகளில் செயல்பாட்டிற்கு வந்து கொண்டிருக்கின்றன.

குறிப்பாக ஈரோடு மாநகராட்சியில், 106.78 கிலோ மீட்டர் நீளத்துக்கு சாலை சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்தோம். 79.83 கிலோ மீட்டர் நீளத்திற்கு பணிகள் முடிக்கப்பட்டு எஞ்சியுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது. இந்தப் பணிகள் அனைத்தும் டிசம்பர் 10க்குள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட இருக்கிறது!

என்னைப் பொறுத்தவரைக்கும், இந்த விழாவிற்கு வந்தோம், அறிவித்தோம் என்று இருக்க மாட்டேன்! அத்தனை அறிவிப்பையும் செயல்படுத்திக் காட்டக்கூடிய அரசுதான் நம்முடைய திராவிட மாடல் அரசு!

கடந்த நான்கு ஆண்டு காலத்தில் ஈரோடு மாவட்டத்துக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் செய்து தரப்பட்டுள்ள திட்டங்களைச் சொல்வதாக இருந்தால் அதற்கே ஏறக்குறைய 2, 3 மணி நேரம் ஆகும். எனவே தலைப்புச் செய்தியாக சிலவற்றை மட்டும் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

- ஈரோடு மாநகராட்சி பேருந்து நிலையத்தை திறந்து வைத்திருக்கிறேன்.
- ஜெயராமபுரத்தில், மாவீரன் பொல்லான் அவர்களுக்கு முழு திருவுருவச் சிலையுடன் அரங்கம் அமைத்து, அதை திறந்து வைத்துவிட்டுதான் இந்த மேடைக்கு நான் வந்திருக்கிறேன்.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

## மொடக்குறிச்சியில் சுதந்திரப் போராட்ட வீரர்

# மாவீரன் பொல்லான் முழு உருவச் சிலையுடன் கூடிய அரங்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**ஈரோடு, நவ. 28-**

**ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சியில் ரூ.4.90 கோடி செலவில் சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.11.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி, ஜெயராமபுரத்தில் 4 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் நம்பிக்கைக்குரிய படைத்தளபதி சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கத்தை திறந்து வைத்தார்.

### தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்த்தோருக்கு மரியாதை!

தமிழ்நாட்டின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு தமிழ்நாட்டிற்குப் பெருமைத் தேடித் தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டிவளர்த்த கவிஞர்கள், இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகள், மேதைகள் மற்றும் அறிஞர்களின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப்படுத்தும் வகையிலும், தமிழ் சமுதாயத்திற்கு அவர்களின் பங்களிப்பை பெருமைப்படுத்தும் வகையிலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நினைவகங்கள், திருவுருவச் சிலைகள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவை அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றப் பின்னர், விடுதலைப் போரில் இன்னுயிர் ஈந்தும், சொத்து சுகங்களை இழந்தும், தியாகங்கள் புரிந்த சுதந்திரப் போராட்ட தியாகிகளைப் போற்றிப் பெருமைப்படுத்திடும் வகையில், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. அவர்கள் சிறையில் இழுத்த செக்கு வைக்கப்பட்டிருக்கக்கூடிய மண்டபம், காந்தி மண்டபத்தில் பொலிவூட்டப்பட்டு அங்கு அவரது மார்பளவு சிலை, வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு திருவுருவச் சிலை, மருது சகோதரர்கள் மற்றும் வீரமங்கை வேலுநாச்சியார் ஆகியோருக்கு திருவுருவச் சிலை, கோயம்புத்தூர் வ.உ.சி. பூங்காவில் வ.உ. சிதம்பரனார் அவர்களின் முழு உருவச் சிலை, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்கு திருவுருவச் சிலை, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களுக்கு திருவுருவச் சிலை, என பல்வேறு தியாக சீலர்களுக்கு சிலைகளை நிறுவி, மணிமண்டபங்கள் அமைத்து அவர்களின் புகழ்போற்றி வருகிறது.

### சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கத்தை திறந்து வைத்தல்

ஈரோடு மாவட்டம், அரச்சலூர் அருகே உள்ள நல்லமங்காபாளையம் கிராமத்தில் பிறந்த பொல்லான், சிறுவயதிலிருந்தே வாள், வில், மற்போரில் சிறந்த முறையில் பயிற்சிகள் பெற்றார். மாவீரன் பொல்லான் பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கிலேயரின் அத்துமீறலுக்கு எதிராகப் போர்புரிந்த தீரன் சின்னமலையின் போர்ப்படையிலும், ஒற்றர் படையிலும் தளபதியாகத் திகழ்ந்தவர். தீரன் சின்னமலை, வெள்ளையர் படையை எதிர்த்து 1801ல் நடைபெற்ற பவானிப்போர், 1802ல் நடைபெற்ற ஓடாநிலைப் போர், 1,803ல் நடைபெற்ற அரச்சலூர் போர் ஆகிய மூன்று போர்களிலும் பெற்ற வெற்றிகளுக்கு மூலகாரணமாகத் திகழ்ந்தவர் மாவீரன் பொல்லான் ஆவார். அதனால், ஆங்கிலேயர்களின் சினத்திற்குள்ளான மாவீரன் பொல்லான் ஆங்கிலேய படைத்தளபதி கர்னல் ஹாரிஸ் அவர்களின் படை வீரர்களால், ஓடாநிலை கோட்டைக்கு அருகில் ஜெயராமபுரத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மாவீரன் பொல்லான் அவர்களது வீரத்தைப் போற்றும் வகையில், ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், வடுகபட்டி கிராமம், ஜெயராமபுரத்தில் 4 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் சுதந்திரப் போராட்ட வீரர்

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்